# நிகழ்ச்சி நிரல் – கட்சி மாநாட்டுக் கூட்டக் குறிப்புகள் (2025)

| | | | |
|---|---|---|---|
| தேதி : | 16 மார்ச் 2026 (ஞாயிற்றுக்கிழமை) | கலந்து கொள்ள தகுதியுடைய பேராளர்களின் எண்ணிக்கை: | 4203 |
| நேரம் : | காலை 10.00 மணி - பிற்பகல் 2.00 மணி | கலந்து கொண்ட பேராளர்களின் எண்ணிக்கை | 3367 |
| இடம் : | IDCC, ஷா ஆலம் | | |
| தலைவர் : | சகோதரர் டத்தோ லியோங் ஙா ஙா | | |
| துணைத் தலைவர்கள் : | 1.சகோதரி நூரித்தா பிந்தி சுவால்<br>2.சகோதரர் டத்தோ கேசவதாஸ் த/பெ அ. அச்சுதன் நாயர் | | |

**மாநாட்டு நிகழ்வுகள்:**

மாநாடு தேசிய கீதமும் கட்சிப் பாடலும் பாடப்பட்டு தொடங்கப்பட்டது.

1. தேசியத் தலைவர் சகோதரர் லிம் குவான் எங் அவர்களின் வரவேற்புரை (இணைப்பு A-ஐ பார்க்கவும்)
2. பொதுச் செயலாளர் சகோதரர் அந்தோணி லோக் சியூ பூக் அவர்களின் கொள்கை உரை (இணைப்பு B-ஐ பார்க்கவும்)
3. மத்திய செயற்குழுவின் அறிக்கை பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.
4. புதிய மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
5. 2024 கட்சி மாநாட்டின் முந்தைய கூட்டக் குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டன.

▪ 2024 கூட்டக் குறிப்புகள் தேசிய அமைப்புச் செயலாளரால் முன்வைக்கப்பட்டன.

முன்மொழிந்தவர்: W2912, மின்னல் வீரன் பழனிசாமி, செனாவாங் தோட்ட கிளை

வழிமொழிந்தவர்: W3104, முகுந்தன் சுப்பிரமணியம், கம்போங் பாசிர் கிளை

▪ கூட்டக் குறிப்புகள் மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

**6. மத்திய செயற்குழுவினால் முறையாகத் தணிக்கையிடப்பட்டு, முந்தைய நிதியாண்டுகளை உள்ளடக்கிய நிதி அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்**

▪ 2024-ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கை தேசியப் பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்: W3820, கேசல் கிரெய்க் கிருஷ்ணன், தாமான் ரூம்புன் பஹாகியா கிளை

வழிமொழிந்தவர்: W2169, கணேசன் இராமசாமி, ஹேப்பி வேலி கிளை

▪ 2024ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கை மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

**7. மத்திய செயற்குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்**

▪ மத்திய செயற்குழு அறிக்கை, முன்பு தணிக்கையிடப்பட்ட நிதி அறிக்கை மற்றும் மத்திய செயற்குழுவின் அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்வதுடன், மூன்று நிகழ்ச்சி நிரல்களையும் ஒன்றாக விவாதிக்க வேண்டும் என தலைவர் முன்மொழிந்தார். இம்முன்மொழிவு ஆதரிக்கப்பட்டு, மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர்: W0312, விநாயகம் த/பெ பெருமாள், பெக்கான் சுங்கை பூலோ கிளை

வழிமொழிந்தவர்: W0130, பூங் ஜின் ஷே, லுயாங் கிளை

▪ விவாதத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள்:

1. W3222 குரத்துல்ஐன் அதீக்கா பிந்தி நோர்சாஹிருல் அனுவார்

• நிறுவனச் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய மடானி அரசை பாராட்டினார். குறிப்பாக நாடாளுமன்ற சேவைச் சட்டம் மற்றும் மலேசிய ஊடக மன்றச் சட்டம் போன்ற முக்கிய சட்ட மசோதாக்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதை வரவேற்றார்.

• சட்டத்துறைத் தலைவரின் (Attorney General) பங்கு மற்றும் அரசு வழக்குரைஞரின் (Public Prosecutor) பங்கைப் பிரிக்கும் சீர்திருத்தம் உள்ளிட்ட அடுத்தகட்ட சீர்திருத்தங்களும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

2. W0126 சென் கா எங்

• வரவிருக்கும் மாநிலத் தேர்தலில் ஜொகூர் மாநில அரசில் டிஏபி இடம்பெற அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

• டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ப பின்வரும் பரிந்துரைகளை முன்வைத்தார்:

o தற்போது கட்சி அரசியலமைப்பின்படி தபால் மூலம் அனுப்பப்படும் எழுத்து அறிவிப்புகள் மட்டுமே சட்டபூர்வமான கூட்ட/மாநாட்டு அறிவிப்புகளாக ஏற்கப்படுகின்றன. இதனைத் திருத்த வேண்டும்.

o மாநில மற்றும் தேசிய மட்டக் கூட்டங்களுக்கான ஆவணங்கள் அச்சுப் பிரதிகளாக அல்லாமல் டிஜிட்டல் முறையில் அனுப்பப்பட வேண்டும்.

o ஒவ்வொரு கிளையின் ஆண்டு பொதுக்கூட்டத்திற்குப் பிறகு உள்ள ஆவணங்கள் செயலி அல்லது இணைய வழியாகப் பகிரப்பட வேண்டும்.

o ஆயுள் உறுப்பினர் கட்டணம் RM100 ஆகவும், ஆண்டு உறுப்பினர் கட்டணம் RM10 ஆகவும் குறைக்கப்பட வேண்டும்.

3. W2480 முகமது பாரித் பின் முகமது அஸ்மி

• மலாய் இனத்தைச் சேர்ந்த டிஏபி உறுப்பினராக தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். பல சவால்கள் இருந்தபோதிலும் கட்சியின் போராட்டத்துடன் உறுதியாக இருப்பதாகக் குறிப்பிட்டார். குறிப்பாக பினாங்கில் டிஏபி பெற்றுள்ள சாதனைகள் குறித்து பெருமை தெரிவித்தார்.முத்தியாரா எல்ஆர்டி (LRT) திட்டம் மற்றும் பினாங்கு சர்வதேச விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்ததற்காக பொதுச் செயலாளருக்கு நன்றி தெரிவித்தார். பினாங்கில் பல உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கிய அமைச்சரவையில் உள்ள கட்சித் தலைவர்களுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

4. W0080 துள்சி திவானி மனோகரன்

• பொதுச் செயலாளர் முன்வைத்த சீர்திருத்தங்களை ஆதரிப்பதாக தெரிவித்தார்.நாடாளுமன்ற உறுப்பினர்களில் 30% பெண்கள் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்ற இலக்கை அடைய கட்சி உழைக்க வேண்டும் என வலியுறுத்தினார்.மறைந்த டத்தோ பி. பட்டு கல்வி நிதியம் உருவாக்கப்பட்டதை வரவேற்றார்.அதேவேளையில், கட்சியின் போராட்டப் பயணம் இன்னும் நீண்டது என்பதையும், சமூக ஜனநாயகக் கொள்கையே கட்சியின் அடிப்படை இலட்சியம் என்பதையும் உறுப்பினர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

5. W2689 லிம் ஹூயி யீ

• கெடா மாநிலத்தில் கூட்டாட்சி அரசின் திட்டங்களை ஒருங்கிணைப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் தீர்வுகள் குறித்து விவாதித்தார். கூட்டாட்சி அரசில் அங்கம் வகிக்கும் கட்சியாக இருந்தாலும், கெடா டிஏபிக்கும் கூட்டாட்சி நிறுவனங்கள் மற்றும் திட்டங்களுக்கும் இடையே கட்டமைக்கப்பட்ட தகவல் தொடர்பு வழிமுறை இல்லாதது முக்கிய சவாலாக இருப்பதாகக் கூறினார்.

இதனால் தகவல் இடைவெளி உருவாகி, மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைப்பதில் சிரமம் ஏற்படுவதாக விளக்கினார்.எனவே, கூட்டாட்சி அரசின் பிரதிநிதிகளுக்கும் கெடாவில் உள்ள மடானி அரசின் கூட்டணி கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையே முறையான ஒத்துழைப்பு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தார்.

6. W1090 சான் லூங் வேய்

• கட்சியின் மத்திய தலைமையகம் சபா டிஏபி மீது அதிக கவனமும் முன்னுரிமையும் செலுத்த வேண்டும் எனக் கோரினார்.ஒற்றுமை அரசாங்கத்தில் உள்ள டிஏபி அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்கள் உட்பட தேசிய டிஏபி தலைமையினருக்கு நன்றி தெரிவித்தார். அவர்கள் சபா மாநில வளர்ச்சியில் அதிக அக்கறையும் அர்ப்பணிப்பும் காட்டியுள்ளதாகக் குறிப்பிட்டார்.இந்த ஆண்டின் இறுதிக்குள் சபா மாநிலத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மதானி அரசாங்கத்தில் டிஏபி சபாவின் பங்கு வெறும்

அரசியல் கோஷமல்ல, உண்மையான வளர்ச்சியைக் கொண்டுவரும் சக்தியாக இருப்பதை நிரூபிக்க வேண்டும் என்றார்.

7. W1369 ஜார்ஜ் லாம் லி காங்

• வரவிருக்கும் மாநிலத் தேர்தலில் சரவாக் டிஏபிக்கு மத்திய செயற்குழு (CEC) உதவுமா என்ற கேள்வியை எழுப்பினார். அதேவேளையில், கட்சியின் அடிப்படைப் போராட்டக் கொள்கைகளையும் மதிப்புகளையும் தலைமைத்துவம் மறக்கக் கூடாது என நினைவூட்டினார்.

8. W1958 டான் எங் ஹோ

• நாடு சரியான வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருவதற்காக ஒற்றுமை அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.காராக் நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டம் மற்றும் 2026 டிசம்பரில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படும் ECRL திட்டம் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டார். அதேவேளையில், பகாங் மாநில அரசில் டிஏபியின் நிலைமை குறித்தும் தனது கருத்தை முன்வைத்தார்.

9. W0113 சியா ஷூ சின்

• கட்சி மற்றும் கிளை தொடர்பான பிரச்சினைகள் கட்சித் தலைமையினரால் அதிக கவனத்துடன் அணுகப்பட வேண்டும் என்றார்.மலாக்கா மாநில சட்டமன்ற (DUN) தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளை கட்சித் தலைமையினர் ஆய்வு செய்ய வேண்டும் எனக் கோரினார்.

10. W2997 லீ காய் யெட்

• இன்றைய மத்திய செயற்குழு (CEC) தேர்தலுக்குப் பிறகும் டிஏபி கட்சியின் வலுவான ஒற்றுமை தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றார். அனைத்து உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் மீண்டும் ஒன்றிணைந்து, கட்சியின் வளர்ச்சிக்கும் மலேசிய மக்களின் நலனுக்கும் பாடுபட வேண்டும் என வலியுறுத்தினார்.கட்சியின் மூத்த போராளிகள் மற்றும் முன்னோடிகளின் பங்களிப்பை மதிக்க வேண்டும் என்றார்.

அவர்களின் தியாகங்களால்தான் இன்று டிஏபி உருவாகி, 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இருமுறை ஆட்சியில் பங்கேற்கும் நிலையை அடைந்துள்ளது எனக் குறிப்பிட்டார். தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சியாக, இம்மூத்த போராளிகளுக்கு விருதுகள் அல்லது பதக்கங்கள் வழங்க பரிந்துரைக்கலாம் என்றும் தெரிவித்தார்.

11. W2723 முகமது யாசர் ஆஸாத் பின் சைனுதீன்

- இம்முறை மத்திய செயற்குழு (CEC) தேர்தலில் போட்டியிடாமல் புதிய தலைமுறைக்கு வழிவகுத்த கூட்டாட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கட்சியின் இரு முக்கிய தலைவர்களான சகோதரர் தான் கோக் வாய் மற்றும் சகோதரர் ஃபோங் குய் லூன் ஆகியோருக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.
- டிஏபி கட்சி முன்னிறுத்தி ஆதரித்து வரும் பல்வகைத் தன்மையும் கலாச்சாரப் பன்முகத்தன்மையும் கட்சியை மற்ற அரசியல் கட்சிகளிலிருந்து வேறுபடுத்துகிறது என்பதையும் அவர் வலியுறுத்தினார்.
- மேலும், நகர மறுசீரமைப்பை மேலும் திறம்பட, வெளிப்படையாக மற்றும் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த உதவும் நகர மறுசீரமைப்பு மசோதாவை (Urban Renewal Bill) கூட்டாட்சி பிரதேசம் வரவேற்கிறது என்றும் தெரிவித்தார்.

12. W1304 லிம் சூ சென்

- மாநாட்டில் கலந்துகொண்ட அனைத்து பிரதிநிதிகளுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

DAPSY-யின் நான்கு முக்கிய போராட்டக் குறிக்கோள்களைப் பகிர்ந்து கொண்டார்:

1971 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் சட்டத்தை (AUKU) ரத்து செய்தல்.

பல்கலைக்கழக சேர்க்கை முறையை ஒருங்கிணைத்து சமமான கல்விக்காகப் போராடுதல்.

அரசியல் கல்வியை மீண்டும் கொண்டு வருதல்.

திறமையான இளைஞர்களை கட்சியில் இணைத்துக்கொள்ளுதல்.

13. W0090 பாங் சோக் தாவ்

- பொதுச் செயலாளர் அறிவித்த இரண்டு முக்கிய முடிவுகளுக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

முதலாவது, டிஏபி மகளிர் தலைவி இனிமேல் வேட்பாளர் தேர்வுக் குழுவின் நிரந்தர உறுப்பினராக நியமிக்கப்படுவார். இது பெண்களின் குரலை வேட்பாளர் தேர்வு செயல்முறையில் உறுதிப்படுத்தும் முக்கியமான சீர்திருத்தம் எனக் கூறினார்.

இரண்டாவது, 16வது பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பெண் வேட்பாளர்களுக்கு 30% ஒதுக்கீடு வழங்கும் முன்மொழிவை வரவேற்றார்.

இந்த 30% பெண்கள் ஒதுக்கீடு தேசிய மட்டத்தில் மட்டுமல்லாமல் அனைத்து நிலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என பரிந்துரைத்தார்.

14. W2169 கணேசன் த/பெ ராமசாமி

- தமிழர் சமூகத்திற்காக மாநில மற்றும் தேசிய நிலையில் தமிழ் பேசக்கூடிய தலைவர்கள் தேவைப்படுகின்றனர் என வலியுறுத்தினார், குறிப்பாக பினாங்கு மாநிலத்தில் இதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

டிஏபி கிளைகள் அமைப்பதில் பெரும் உதவி செய்த பினாங்கு மாநிலத் தலைவர் சகோதரர் ஸ்டீவன் சிம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்.

15. W0367 இப் ஜென்சென்

- மலேசிய இளைஞர்களிடையே அதிகரித்து வரும் “Brain Drain” (திறமையாளர்கள் வெளிநாடு குடிபெயர்தல்) பிரச்சினையை எடுத்துரைத்தார்.

சிறந்த வேலை வாய்ப்புகள் மற்றும் முன்னேற்ற வாய்ப்புகளைத் தேடி பல இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால், நாடு தனது திறமையான மனித வளத்தை இழந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

16. W0132 லாவ் வெங் சான்

- கடந்த ஆண்டு சரவாக்கில் நடைபெற்ற சபாநாயகர் மாநாட்டில், அனைத்து மாநிலங்களின் சபாநாயகர்களும் மாநில சட்டமன்றங்களின் தேர்வுக் குழுக்கள் மற்றும் சட்டமன்ற சேவைகளை வலுப்படுத்த உறுதியளித்ததாகப் பகிர்ந்து கொண்டார்.

இந்த முயற்சிக்கு டிஏபி-யின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும், டிஏபி வேட்பாளர்கள் அனைவரும் நேர்மையும் நற்பண்பும் கொண்டவர்களாக இருப்பதை உறுதி செய்ய, வேட்பாளர் தேர்வுக்கான தெளிவான நிர்வாகக் கொள்கை அவசியம் என பொதுச் செயலாளர் முன்வைத்த கருத்தை ஆதரித்தார்.

17. W0535 Chan Cheng Huat

- தேர்தல் இயக்குநர் பதவியை நிரந்தரமான அதிகாரப்பூர்வ பதவியாக மாற்ற வேண்டும் என்ற பொதுச் செயலாளரின் பரிந்துரையை ஆதரித்தார்.

தேர்தல் நெருங்கும் போது மட்டுமே இந்தப் பதவியை நிரப்பாமல், நீண்டகால திட்டமிடலுடன் செயல்படும் முக்கியப் பொறுப்பாக அது இருக்க வேண்டும் என்றார்.

18. W2725 சுவா சியாங் ஜூ

- நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) ஈர்க்க அரசு இன்னும் தீவிரமான மற்றும் மூலோபாயமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கூறினார்.
- எடுத்துக்காட்டாக, வியட்நாம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கவர்ச்சிகரமான வரிச் சலுகைகளை வழங்குவதால், மலேசியாவை விட போட்டித்தன்மை பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.
- மேலும், உட்கட்டமைப்பு, தளவாட வசதிகள், திறமையான தொழிலாளர் வளம் மற்றும் அரசியல் நிலைத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதும் FDI-ஐ ஈர்க்க அவசியம் என்றார்.

இனம், மதம் பாராமல் ஒவ்வொருவரின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை நினைவூட்டிய அவர், ஒற்றுமை அரசாங்கம் பழமைவாத அரசியல்

நோக்கங்களை ஆதரிக்காமல், பன்முக சமூகத்தின் உரிமைகளை தொடர்ந்து காக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

**மத்திய செயற்குழு அறிக்கையை பரிசீலித்து ஏற்றுக்கொள்ளுதல்**

முன்மொழிந்தவர்: W0132 லாவ் வெங் சான், பெக்கான் தெலோக் டத்தோ

கிளை

வழிமொழிந்தவர்: W0130 பூங் ஜின் சே, லுயாங் கிளை

**▪ மத்திய செயற்குழு அறிக்கை மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.**

**8. மத்திய செயற்குழுவால் (JTP) முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை அங்கீகரித்தல்**

முன்மொழிந்தவர்: W1428, லீ சாவ் வேய்,O.U.G கிளை

ஆதரித்தவர்: W0083, திவ் தீ சியாங், கம்போங் சிம்மீ பாரு கிளை

**▪ மத்திய செயற்குழுவால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டன.**

**9. அடுத்த தேசிய மாநாடு வரை கட்சியின் வெளிப்புற தணிக்கையாளராக தகுதி பெற்ற கணக்காளர் அல்லது கணக்காய்வு நிறுவனத்தை நியமித்தல்**

பரிந்துரைக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனம்: TCMK Associate

முன்மொழிந்தவர்: W0132 லாவ் வெங் சான், பெக்கான் தெலோக் டத்தோ கிளை

வழிமொழிந்தவர்: W2751 லியோங் ஓய் ஈ, தாமான் செராஸ் கிளை

**▪ இந்த முன்மொழிவு மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.**

**10. அடுத்த தேசிய மாநாடு வரை கட்சியின் உள்துறை தணிக்கையாளர்களாக இரு கட்சி உறுப்பினர்களை நியமித்தல்**

**உள்துறை தணிக்கையாளர் 1:W1428, லீ சாவ் வேய், O.U.G கிளை**

முன்மொழிந்தவர்: W2750 லியூ சீ க்வான், தாமான் செராஸ் கிளை

வழிமொழிந்தவர்ர்: W0535 சான் செங் ஹூவாட், காஜா பேராங் கிளை

**உள்துறை தணிக்கையாளர் 2:W0534, லீ சியாங் செங்,காஜா பேராங் கிளை**

முன்மொழிந்தவர்: W0535 சான் செங் ஹூவாட், காஜா பேராங் கிளை

வழிமொழிந்தவர்: W1090 சான் லூங் வெய் ,பெக்கான் ஆப்பி-ஆப்பி கிளை

**▪ இந்த முன்மொழிவும் மாநாட்டு பிரதிநிதிகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.**

கூட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

▪ கூட்டம் மாலை 5.00 மணிக்கு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

**11. புதிய மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு முடிவுகள்**

**▪ தேர்தல் அதிகாரி (RO) அவர்களால் புதிய 30 மத்திய செயற்குழு உறுப்பினர்களின் தேர்தல் முடிவுகள் மாலை 7.20 மணிக்கு அறிவிக்கப்பட்டன.(இணைப்பு C-ஐ பார்க்கவும்)**

▪ கூட்டம் மாலை 5.00 மணிக்கு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

…………………………………. ………………………………